## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## OS.No.243/2022

## சாட்சியின் சான்றுரை PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கஸ்தூாரி | வட்டம் | - | |
| க/பெ | - | முருகன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

30.08.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் பூர்வீக சொத்தில் 4ல் 1 பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். அதில் யார் யாருக்கு பாகம் என்றால் என் தந்தையாருக்கு, என் அண்ணனுக்கு, என் சகோதரிக்கு மற்றும் எனக்கும் ஆகும். பூர்விக சொத்து என்று எந்த அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்து அந்த சொத்தை அனுபவித்தோம். அந்த சொத்து என் அப்பா, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் ஒன்றாக உழைத்து சம்பாதித்த சொத்து ஆகும். என் பெரியப்பா பெயர் பாவாடை படையாட்சி, சித்தப்பா பெயர் ரங்காநாத படையாட்சி மற்றும் ராமானுஜ படையாட்சி ஆகும். அவர்கள் அனைவரும் ஆனந்த படையாட்சியின் பிள்ளைகள் ஆகும். அவர் என் தாத்தா. ஆனந்த படையாட்சிக்கு 4 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் ஆவார்கள். பெண் குழந்தைகள் பெயர் பாக்கியலட்சுமி, தில்லைநாயகி என்கிற பன்னீர்செல்வம், அஞ்சாலாட்சி, அலமேலு ஆவார்கள். இந்த வழக்கில் அவர்கள் விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சொத்தில் ஆனந்தபடையாட்சிக்கு என் தந்தையார் மட்டுமே வாரிசு என்று சொல்லியுள்ளேன்

என்றால் என் அப்பாவின் சொத்தில் தான் நான் பங்கு கேட்கிறேன் அதனால் அவ்வாறு சொல்லியுள்ளேன். வழக்கில் ஒரே ஒரு சொத்து உள்ளது என்றால் சரிதான். சொத்துக்களுக்கு கிரையம் யார் பெயரில் என்றால் தாத்தா பெயரில் கிரையம். ஆனால் அது கூட்டுக்குடும்ப சொத்து ஆகும். என் தாத்தா ஆனந்த படையாட்சி என் தந்தையாருக்கு 2 தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். அது எழுதிய வருடம் 1992 ஆகும். அந்த செட்டிலமெண்ட் பத்திரத்தில் ஆனந்த படையாட்சி என் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். இரண்டு செட்டில்மெண்டிலும் நிறைய சொத்துக்கள் எழுதி உள்ளார் என்றால் இல்லை. ஒரே சொத்து தான் எழுதி வைத்திருக்கிறார். இந்த வழக்கு சொத்து மட்டும் எழுதி வைத்துள்ளாரா என்றால் ஆம். வீடு மனையும் எழுதி வைத்துள்ளார். இந்த வழக்கு சொத்தும் ஒரு வீட்டு மனை சொத்தும் எழுதி வைத்துள்ளார். இந்த வழக்கு சொத்து விழுப்புரத்தில் உள்ள சொத்து என்றும் பாண்டிச்சேரியிலும் என் தாத்தா சொத்து எழுதி கொடுத்தார் என்றால் என் தாத்தா எழுதி கொடுத்த சொத்து அனைத்தும் பாண்டிச்சேரியில் உள்ள சொத்துதான் எழுதி கொடுத்தார். அதை விற்றுவிட்டு என் தந்தையார் விழுப்புரத்தில் வ ழக்கு சொத்தை வாங்கினார். என் தாத்தாவிற்கு அவரது பூர்விக சொத்துக்கள் உள்ளதா என்றால் (தந்தையார் வழியல்) இல்லை. அனந்த படையாட்சி எழுதி வைத்த சொத்துக்கள் அனைத்தும் என் தந்தை பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்தோம். தாத்தா பெயரில்கிரையம் வாங்கும் போது நான் பிறக்கவில்லை என்றால் ஆம். இந்த வழக்கில் தாத்தா பெயரில் நாங்கள் அனைவரும் சம்பாதித்த சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் அது தவறாக சொல்லியுள்ளேன். எனக்கு 2006ல் திருமணம் ஆனது. என் தாத்தா, அப்பா, நான் ஆகியோர் பாண்டிச்சேரியில் கீழுரில் இருந்தோம் என்றால் சரிதான். கீழூரில் சொத்து சொத்து உள்ளதா என்றால் ஒரு வீடு இருந்தது. அதை இடித்துவிட்டு

தற்போது மண்ணாக உள்ளது. கீழுரில் உள்ள சொத்து குறித்து புதுச்சேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.300/ 2022 என்ற வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புதுச்சேரியில் உள்ள சொத்திற்கு வழக்கு போடும் போது விழுப்புரத்தில் உள்ள சொத்திற்கு சேர்த்து வழக்கு போடலாம் என்று சட்டம் உள்ளபோது எதற்காக இரண்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் விழுப்புரத்தில் உள்ள சொத்திற்கு எனக்கு நிலம் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். நான் புதுச்சேரியில் உள்ள சொத்திற்கு அதில் பிரதான இடத்தில் இருப்பதால் கடை எதுவும் வைத்துக்கொள்ளலாம் என்று அங்கு ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். இரண்டு வழக்கும் 2022ல் போட்டேன் என்றால் சொத்து கொடுக்கிறேன் என்றார்கள் அதற்கு பிறகு இழுபறியாக பேசினார்கள். அதனால் இரண்டு வழக்கு போட்டுள்ளேன். சொத்தில் பாகம் கொடுக்கிறார்கள் என்ற விவரத்தை நான் இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கு சொத்தில் பாகம் கேட்டு நான் நோட்டிஸ் எதுவும் கொடுத்தேனா என்றால் இந்த வழக்கில் காடுக்கவில்லை. புதுச்சேரி வழக்கில் கொடுத்துள்ளேன். என் தாத்தா சொத்து வாங்கியதை தவிற என் தந்தையும் தனியாக வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். ஆனால் நாங்கள் கும்பளாக உழைத்து வாங்கினோம். என் தந்தையார் பெயரில் எப்போது கிரையம் பெறப்பட்டது என்றால் 1994ல் கிரையம் பெறப்பட்டது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சொத்து எந்த ஊரில் உள்ள சொத்து என்றால் கீழுரில் உள்ள சொத்து ஆகும். என் தந்தை பெயரில் உள்ள கிரைய சொத்திற்கு நான் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் அதை விற்றுவிட்டு இங்கு வாங்கியுள்ளார்கள் அதனால் அதற்கு மட்டும் போட்டுள்ளேன். அதை யார் விற்றார்கள் என்றால் கும்பளாக நாங்கள் முடிவு செய்து நாங்கள் விற்றோம். அந்த கிரையபத்திரத்தில் நாங்கள் கையெழுத்து போட்டுள்ளோமா என்றால் அப்பா

மட்டும் போட்டுள்ளார். என் தந்தையார் அந்த சொத்தை 2010ல் விற்றார். 2010ல் விற்றதற்கு 2020ல் 10 வருடம் கழித்து வழக்கு போட்டேன் என்றால் எனக்கு 2006ல் திருமணம் நடந்தது. என் கணவர் ஷேர்மார்க்கெட்டில் முதலீடு செய்தார். எங்களுக்குள் பிரச்சனை இருந்தது. அப்போது என் அப்பா, அம்மா, அண்ணன் ஆகியோர் வற்ற பணத்தை எடுத்துப்போனால் அதையும் ஷேர் மார்க்கட்டில் போட்டுவிடுவர் அதனால் நிலத்தை வாங்கினால் அதை மனைபிரிவுகளாக மாற்றி விற்கலாம் என்று சொன்னதால் நான் அதை நம்பினேன். ஏனென்றால் எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். என் அக்கா என்னை போல் ஏன் சொத்தை கேட்கவில்லை என்றால் அவர் எனது அம்மாவின் தம்பியை திருமணம் செய்துள்ளார். அதற்கு நிறைய பங்காளிகள் இருப்பதால் தாய்மாமன்கள் தவறாக நினைத்துவிடுவார்கள் என்பதால் அவர் கேட்கவில்லை. இந்த வழக்கு சொத்துக்கள் 3ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் பெயரில் உள்ளது என்றால் ஆம் அவர் பெயரில் தான் வாங்கினோம் ஆண் வாரிசு என்பதாலும் அப்பாவிற்கு பிறகு எங்களை பார்த்துக்கொள்வார் என்பதாலும் அவர் பெயரில் வாங்கினோம். என் அண்ணன் தனியாக தொழில் செய்கிறார் என்றால் இல்லை. என்றைக்காவது ஒரு கொத்தனார் வேலை செய்வார். தினசரி அவர் வேலைக்கு செல்லமாட்டார். குடும்பத்திற்கு என்ன வருமானம் என்றால் என் தந்தை வாங்கும் பென்சன் பணம் மற்றும் எனது அண்ணன் மனைவி வேலை செய்கிறார் அவருக்கு வரும் பணம் தான் வருமானம். பூர்விக சொத்து இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் போடவில்ல்ல என்றால் அது பூர்விக சொத்து ஆகும். ஜவஹர் ஹவுஸிங் சொசைட்டி என்று இரண்டு பத்திரம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை என் தந்தையார் தான் அடமானம் வைத்தார் என்றால் சரிதான். ஒன்று அடமானம் வைத்தது. ஒன்று மீட்டது ஆகும். பூபதி என்ற பெயரில் ஒரு அடமானம் போட்டுள்ளது என்றால் சரிதான். ஜவஹர் ஹவுஸிங் சொசைட்டியில் அடமானம் ஒன்றை போட்டுள்ளேன் என்றால் அது வீடு கடைக்கால் போடும் போது

வாங்கியது. மற்றொரு அடமானம் வீட்டை சீர்செய்யும் போது வாங்கியது. அந்த சொத்து கீழூரில் கிராமத்தில் உள்ள சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிற என் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் விழுப்புரத்தில் இல்லை என்றால் சரிதான். அடமானம் போட்டதும் பைசல் செய்ததும் என் தந்தையார் என்றால் சரிதான். என் தந்தையார் நடமாடிக்கொண்டுதான் இருக்கிறார் என்றால் சரிதான். வழக்கில் அவர் உடம்பு சரியில்லை என்று நான் போட்டுள்ளேன் என்றும் அவருக்கு சிறுநீர் கழிக்கும் இடத்தில் ஒரு வால்வு அழுகிவிட்டது என்றும் அவருக்கு அறுவைசிகிச்சை செய்யவேண்டும் என்று என் அண்ணன் 3ம் பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கினார்கள் நான் உடன் இருந்தேன். எனக்கும் என் அண்ணனுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் இந்த வழக்கு போட்ட பிறகு பேச்சுவார்த்தை இல்லை. என் அப்பா பழனி என்பவருக்கு ஒரு பவர் பத்திரம் எழுதி கொடுத்து அவர் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பழனிக்கு என் தந்தை மட்டும் தான் பவர் கொடுத்தார் என்றால் சரிதான். பூர்விக சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றும் ஆனந்த படையாட்சி சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார் என்றும் அந்த சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் சொத்துக்கள் என்றும் வழக்கு சொத்து 3ம் பிரதிவாதியின் தனிச்சொத்து என்றும் அதில் பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு போடுவதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வயதான காலத்தில் என் தந்தையை அலையவைப்பதற்காக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் தனக்கு பாகம் எதுவும் தேவையில்லை என்று எதிருரை போட்டுள்ளார் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதியும் இந்த வழக்கில் பாகம் கோரவில்லை என்றால்

அவர்கள் வெளியில் கேட்கிறார்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லை. நான் இரண்டு வழக்கு போட இயலாது என்றும் வேண்டுமென்றே போட்டுள்ளேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நாங்கள் குடும்பம் பாண்டிச்சேரி என்பதால் தமிழ்நாட்டில் இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.